மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 102, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

102—

குறிஞ்சிப்பாடியைத் தனி தாலுக்காவாக்குதல்

*** 32968**—திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், குறிஞ்சிப்பாடியைத் தனி தாலுக்காவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் இல்லை.

முற்பகல் 10.10

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் நம்முடைய புரட்சி தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு பல்வேறு காரியங்களைத் தமிழகத்திற்கு ஆற்றியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக மாவட்டங்களைப் பிரித்தல்; போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெயர் வைத்தல்; மற்றும் வட்டங்கள் பலவற்றைப் பிரித்து மக்களுக்கு அன்றாட காரியங்கள் சுலபமாகச் சென்று அடைகின்ற வகையில் அவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் கிடைத்திடுவதற்காக டிசென்டரலைசேஷன் என்ற முறையில் இந்த மாவட்டங்கள் எல்லாம் பிரிக்கப்பட்டு, இன்றைக்கு வள்ளலார் மாவட்டம்; விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம்; காயிதே மில்லத் மாவட்டம் என்று பிரித்திருக்கிறார்கள். ஆனால் மாவட்டங்களைப் பிரித்ததை மனம் உள்ளவர்கள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். நன்றி இல்லாதவர்கள் நமக்கு இடையூறுகள் செய்து கொண்டிருந்தாலும் நம்முடைய கடன் மக்களுடைய பணியைச் செய்து முடிப்பது என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு புரட்சி தலைவி அவர்கள் வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார் என்ற எண்ணத்தில் காரியங்களை ஆற்றி வருகிறார்கள். அப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சி தலைவியினுடைய இந்த

ஆட்சியில், குறிஞ்சிப்பாடி 32 கிலோ மீட்டர் தூரம் கடலூரிலிருந்து இருக்கிறது. இப்போது கடலூரிலே இந்த வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. இதைப் பிரித்து, குறிஞ்சிப்பாடியைத் தனியாக ஒரு வட்டமாக அறிவிக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நலன் கருதி குறு வட்டங்களும், வட்டங்களும் அதேபோல் வருவாய்க் கோட்டங்களும், வருவாய் மாவட்டங்களும் பிரிக்கப்படுகின்றன. அப்படிப் பிரிக்கப்படுகிறபொழுது எந்த அளவுக்கு மக்கள் பயன்பெற வேண்டுமோ அதை எண்ணி, அதை மனதிலே வைத்துக்கொண்டு இந்த ஆட்சி இதைச் செய்து வருகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிஞ்சிப்பாடி கடலூரிலிருந்து வெகு தூரத்தில் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். இருந்தபோதிலும் குறிஞ்சிப்பாடியைச் சுற்றிலும் இன்றைக்கு கடலூர் வட்டம், பண்ருட்டி வட்டம், சிதம்பரம் வட்டம், விருத்தாசலம் வட்டம் போன்ற வட்டங்கள் இருக்கின்றன. குறிஞ்சிப்பாடி இன்றைக்கு ஒரு பேரூராட்சியாக இருக்கிறது. குறிஞ்சிப்பாடி குறுவட்டத்தில் 24 கிராமங்கள்தான் இருக்கின்றன. மாநிலத்திலே இருக்கிற இப்படிப்பட்ட குறு வட்டங்களை வட்டங்களாக ஆக்குகிறபொழுது, மக்களுடைய நலனைக் கருதி எதை எதை எப்படிச் செய்ய முடியுமோ, அதைச் செய்வதற்கு அரசு எல்லாவற்றையும் யோசிக்கிறபோது இதையும் யோசிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக ஆட்சி வந்த பிறகு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பல்வேறு காரியங்களை ஆற்றித் தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு புரட்சி தலைவி அவர்கள் எப்படி இன்றைக்கு சமூகநீதி காத்த வீராங்கனையாகவும், தொட்டில் குழந்தைத் திட்டத்தினை அறிவித்ததன் மூலம் இன்றைக்கு உலகத்திற்கே எடுத்துக் காட்டாகவும், மகளிர் காவல் நிலையங்களைத் திறந்ததன் மூலமாக இன்றைக்கு எப்படி சரித்திரத்திலே இடம் பெற்று இருக்கிறார்களோ அதைப்போன்றே நம்முடைய புரட்சி தலைவி அவர்கள் உயிரோடு இருக்கின்ற வரை அவர்கள் தான் முதலமைச்சர் என்பதை நினைவிலேற்றி இன்றைக்கு ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அதற்கு நல்ல மனம் படைத்தவர்களெல்லாம் ஆதரவு அளித்துக்கொண்டு இருக்கிற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதி ஆண்டிலாவது இதனைப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதி ஆண்டு கதவைத் தட்டிக்கொண்டு இருக்கிறது. இன்னும் 4, 5 நாட்கள்தான் இருக்கின்றன, வருகின்ற நிதியாண்டு வருவதற்கு. ஆகவே, இந்தக் குறுகிய காலத்திற்குள் இதைச் செய்ய முடியுமா என்பதை இந்த அரசு யோசிக்கும். இதுமட்டுமல்ல, இதேபோல் பல்வேறு இடங்களில் இருந்து பொது மக்களுடைய வேண்டுகோள்கள் வந்து இருக்கின்றன. வேண்டுகோளும் நியாயமான வேண்டுகோளாகத்தான் இருக்கின்றது. அதையெல்லாம் நம்முடைய அரசு யோசிக்கும்போது, இதையும் யோசிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 103, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

103—

உணவுப் பொருள் சேமிப்பு கிடங்குக் கட்டிடம் கட்டுதல்

*** 38587—**திரு. *சிங்கை கோவிந்தராசு* :

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ். எஸ். குளம் ஒன்றியத்தில் உணவுப் பொருள் சேமிப்பு கிடங்குக் கட்டிடம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10.15

திரு. *சிங்கை கோவிந்தராசு* : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தினுடைய தன்னிகரற்ற தலைவியாக இருக்கக் கூடிய டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் ஏழையெளிய மக்களினுடைய உள்ளத்தைக் குளிர வைத்து அரிசி விலையை இந்த பட்ஜெட்டிலே குறைத்து, தமிழகத்திலே இருக்கக் கூடிய நல்லவர்கள், ஏழைகள் பாராட்டுகின்ற சிறப்பான ஒரு பட்ஜெட்டை கொடுத்திருக்கக் கூடிய டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்கு கோவை மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைச் சொல்லி, அரிசி விலையைக் குறைத்து இருக்கக் கூடிய இந்த ஆட்சியில் ஏழையெளியவர்கள் அதிகமாக வாழுகின்ற